# பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை 600 006

முனைவர் ப. மணி
பள்ளிக் கல்வி இயக்குநர்

கல்லூரிச்சாலை
சென்னை 600 006.

**<u>நேர்முக கடித எண் 32599/பிடி1/இ1/12, நாள்: 24.05.2012</u>**

அன்புடையீர்,

2011 –12ஆம் கல்வியாண்டின் தொடக்கத்தில் மேல்நிலை / உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவ மாணவிகள் ஆகிய அனைவருக்கும் என்னுடைய மனம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

10 மற்றும் 12ஆம் வகுப்புக்களுக்கான அரசுப் பொது தேர்வுகளில் கல்வித் தகுதியில் சிறப்பிடம் பெற்றுள்ள மாணவ, மாணவியருக்கு என் மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டுகளைவிட தேர்ச்சி விழுக்காடு அதிகம் பெற்றுள்ள பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்ச்சி விழுக்காடு குறைந்துள்ள பள்ளித் தலைமையாசிரியர்களும், ஆசிரியர்களும் எவ்வித மனச்சோர்வுமின்றி இனி வரும் காலங்களில் மிகுந்த முயற்சிகள் மேற்கொண்டு அதிகத் தேர்ச்சி விழுக்காடு பெற்று வெற்றிகாணுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

"நல்ல தொடக்கம், சிறந்த வெற்றி" என்பதற்கேற்ப கோடை விடுமுறைக்குப் பின் ஜுன் திங்கள் பள்ளி தொடங்கியவுடனே இக்கல்வியாண்டின் செயல்திட்டங்களைத் தலைமையாசிரியர்கள் வகுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். தொடக்கம் முதலே கீழ்க்காணும் திட்டங்களைப் பன்முக நோக்கில் தலைமையாசிரியர்கள் செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மேல்நிலை / உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் செயல்பாட்டிற்கு :**

**1. பள்ளி வயதுக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்**

2010–11 ஆம் கல்வி ஆண்டில் பள்ளி வயதுக் குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்திடவும், பள்ளியில் சேர்ந்த குழந்தைகள் அனைவரும் எந்த வகுப்பிலும் தேக்கமின்றித் தொடர்ந்து படித்திடவும், பள்ளியில் படிக்கும் மாணாக்கர்கள் அனைவரும் ஆண்டுத் தேர்வில் வெற்றி பெறச் செய்வதுமே பள்ளியின் நோக்கங்களாகக் கொண்டு இக்கல்வி ஆண்டின் தொடக்கத்தில் இருந்தே முனைப்புடன் செயல்பட வேண்டும். 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களின் வெற்றிக்கு முழுக் கவனம் செலுத்துவது போல் 6 முதல் 12ம் வகுப்பு வரை அனைத்து வகுப்பு மாணவர்களின் வெற்றியை முன் வைத்து ஆசிரியர்களது பணி அமையத் தலைமை ஆசிரியர்கள் தூண்டுகோலாக அமைய வேண்டும்.

**2. மாணவர் நலத் திட்டம் – மாணவர்களுக்கு அரசால் அளிக்கப்படும் விலையில்லா சலுகைகளைப் பெற்றுத் தருதல்**

அரசினால் பள்ளி மாணவ, மாணவியருக்கு அளிக்கப்படும் விலையில்லாப் பாடப்புத்தகங்கள், விலையில்லா சீருடைகள், விலையில்லாப் பேருந்துப்பயண அட்டை, விலையில்லா மிதிவண்டி, விலையில்லா புத்தகப் பை, விலையில்லா காலணிகள், விலையில்லா மடிகணினி, விலையில்லா நோட்டுப் புத்தகங்கள், கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள், மற்றும் உலக வரைப்படம் போன்றவை உரிய காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**3. பள்ளி வளாகத்தைத் தூய்மையாகப் பராமரித்தல்**

பள்ளி வளாகத்தூய்மை குழந்தைகளிடையே புத்துணர்வை ஏற்படுத்துவதுடன், எப்பொழுதும் கற்றல், கற்பித்தல் நிலையை மேம்படுத்தும். எனவே, பள்ளி வளாகத்தைத் தூய்மையாக பராமரிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**4. காலை வழிபாட்டுக் கூட்டம் நடத்துதல்**

கூட்டு வழிபாட்டு நிகழ்வானது, மாணவ, மாணவரிடையே ஒருமைப்பாட்டு உணர்வினை வளர்க்கிறது. எனவே, நாள்தோறும் கூட்டு வழிபாடு நிகழ்த்துவதில் தலைமையாசிரியர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

அக்கூட்டு வழிபாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தேசிய கொடியேற்றுதல், கொடி வணக்கம், கொடிப்பாடல் பாடுதல், திருக்குறள் கூறி விளக்கம் கூறுதல், செய்திகள் வாசித்தல் (தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில்) அறிவியல் செய்திகள் கூறுதல், தலைமையாசிரியர் / ஆசிரியர் அறிவுரை வழங்குதல், மாணவ, மாணவியர்களுக்கான பிறந்த நாள் வாழ்த்துக் கூறுதல், நன்மாணாக்கர்களுக்குப் பாராட்டுக் கூறுதல் போன்ற சிறப்புக் கூறுகள் அன்றாடம் இடம் பெற வேண்டும்.

**5. ஆசிரியர் வருகை – குறுஞ்செய்தி மூலம் வருகைப் பதிவு**

ஆசிரியர் வருகைப் பதிவேட்டினை மிகச் சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதவரின், வருகையை குறுஞ்செய்தி மூலம் தலைமை ஆசிரியர் மையக்கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பி பதிவு செய்ய வேண்டும். அங்கிருந்து வருகைப் பதிவு சார் தகவல் அனைத்து பள்ளிக் கல்வித் துறை உயர் அலுவலர்களுக்கு உடனடியாக மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். இதனைத் தலைமையாசிரியர்கள் கண்காணித்தல் வேண்டும்.

**6. தலைமையாசிரியர் வகுப்பறையில் பாடம் கற்பித்தல்**

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் குறைந்த பட்சம் 10 பாட வேளைகள் வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபட வேண்டும். தலைமையாசிரியர் அனைவரும் குறைந்தபட்சம் ஒரு வகுப்பிற்காவது, தம்முடைய பாடத்தைக் கற்பிக்க வேண்டும். ஓரிரு பாட வேளைகளில் நீதிபோதனை முதலான பாடங்களைக் கற்பிக்கலாம்.

பாடப்பொருள் திரட்டல், கற்பித்தல், உத்திகளைக் கையாளுதல், பாடத்திற்கும் தலைப்பிற்கும் ஏற்ப துணைக் கருவிகள் பயன்படுத்துல் முதலான அனைத்திலும் தலைமையாசிரியர்கள் பிற ஆசிரியர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்.

**7. தலைமையாசிரியர்கள் வகுப்புகளை மேற்பார்வையிடுதல்**

தலைமையாசிரியர்கள், நாள் தோறும் குறைந்தபட்சம் இரண்டு வகுப்புகளுக்குச் சென்று ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்பார்வையிட வேண்டும். ஆசிரியர்கள் கற்பிக்கும் முறை, பாடப்பொருள் குறிப்பு, துணைக்கருவிகள் பயன்பாடு, வகுப்பாட்சி, மாணாக்கர் ஈடுபாடு, கரும்பலகைப் பயன்பாடு போன்ற செயல்பாடுகளை உற்று நோக்கி மேற்பார்வைப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். குறை நிறைகளைக் கண்டறிந்து அவர்களைத் தனியே வரவழைத்து அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமின்றி, இனிய எளிய முறையில் விளக்கிட வேண்டும்.

**8. பணிசெய் பதிவேடு (Work done register)**

இக்கல்வியாண்டு தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடவேளையிலும் ஒவ்வொரு வகுப்பிலும் ஆசிரியரால் என்ன பாடப்பொருள் குறித்துக் கற்பிக்கப்பட்டது, எத்தகைய துணைக் கருவிகள் பயன்படுத்தப்பட்டது போன்ற விவரங்களை ஒவ்வொரு பாடப்பிரிவு முடிந்த பிறகு பாடம் கற்பித்த ஆசிரியர்கள், வகுப்பிலேயே பதிவு செய்யக் கூடிய Work done register பராமரிக்கச் செய்ய வேண்டும். இப்பதிவேட்டில் கீழ்க்குறித்துள்ள பதிவுகள் இடம் பெறத்தக்க வகையில் படிவம் அமைக்க வேண்டும்.

வகுப்பு பிரிவு நாள்

| பாடவேளை | பாடம் | தலைப்பு | ஆசிரியர் பெயர் | பயன்படுத்திய துணைக்கருவி | பிற குறிப்பு | ஆசிரியர் கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**9. தொடர் மற்றும் முழுமையான கூட்டு மதிப்பீடு (CCE)**

ஒவ்வொரு குழந்தையின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணர்ந்து முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதுடன் அதனை உறுதி செய்யும் விதத்தில் உருவாக்கப்பட்டதே தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறை 1 – 8 வகுப்புகளுக்கு இம்முறை 2012–13ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இந்த புதிய மதிப்பீட்டு முறையில் மாணவர்கள் தொடர் மதிப்பீடு செய்யப்படுகின்றனர். இதனால் மாணவர்களின் உடல் மனஅழுத்தம் ஆகியவை குறைக்கப்பட்டு, மாணவர்கள் தேர்வு பயத்திலிருந்து விடுபடவும் இம்முறை உதவுகிறது. மேலும், இம்முறையில் மாணவர்களின் கல்வி சார்ந்த மற்றும் இணை கல்வி சார்ந்த செயல்பாடுகள் அனைத்தும் மதிப்பீட்டிற்கு

எடுத்துக் கொள்ளப்படும். தற்போது 1 முதல் 4ஆம் வகுப்புவரை நடைமுறையில் உள்ள செயல்வழி கற்றல் முறையுடன் இணைந்து, இத்தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை குழந்தைகளின் அனைத்து திறன்களையும் வளர்க்கும்.

**ஒவ்வொரு பருவத்திற்கும் வழங்கப்படவுள்ள தரம் மற்றும் தர புள்ளிகள் விவரம் :**

| மதிப்பெண்கள் | தரம் | தரப் புள்ளி |
|---|---|---|
| 91 – 100 | A1 | 10 |
| 81 – 90 | A2 | 9 |
| 71 – 80 | B1 | 8 |
| 61 – 70 | B2 | 7 |
| 51 – 60 | C1 | 6 |
| 41 – 50 | C2 | 5 |
| 33 – 40 | D | 4 |
| 21 – 32 | E1 | – |
| 20 மற்றும் அதற்கு கீழ் | E2 | – |

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (CCE) முறைய நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யும் விதத்தில் புதிய மதிப்பீடு சார்ந்த பயிற்சிகள் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் வழங்க.ப்பட்டு வருகிறது. மேலும், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் உதவியுடன் இந்த புதுமையான மதிப்பீடு முறை குறித்து ஓர் மக்கள் விழிப்புணர்வு இயக்கம் மாநிலம் முழுவதும் நடத்தப்படும்.

**10. முப்பருவ முறை (Trimester System)**

மாண்புமிகு முதலமைச்சரின் தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி குழந்தைகளின் புத்தகச் சுமையை குறைப்பதற்கு புதுமையான முப்பருவமுறை 2012–13ஆம் கல்வியாண்டு முதல் 1–8 வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் ஒரு பருவத்திற்கு தேவையான புத்தகங்களை மட்டுமே குழந்தைகள் எடுத்துச் செல்வர். இது மாணவர்களுடைய புத்தகச் சுமைய வெகுவாக குறைப்பதுடன், இளம் சிறார்களின் மன பயத்தினையும் போக்கும்.

இம்முறையில் ஒரு கல்வியாண்டு மூன்று பருவங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முதல் பருவம் | ஜுன், ஜுலை, ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் |
| இரண்டாம் பருவம் | அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் |
| மூன்றாம் பருவம் | ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் |

- ஒரு கல்வியாண்டு மூன்று பருவங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.
- ஒரு கல்வியாண்டின் பாடத்திட்டம் மூன்றாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பருவத்திற்கும் அனைத்து பாடங்களையும் ஒருங்கிணைந்து ஒரு புத்தகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- கல்வி சார்ந்த மற்றும் இணை கல்வி செயல்பாடுகளை (Scholastic and Co-Scholastic areas) தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு, வழிமதிப்பீடு செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**11. கற்றல், கற்பித்தல் மேம்பாடு**

பத்தாம் வகுப்பு, மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பகுப்பாய்வு செய்வதோடு, பிற வகுப்பு மாணவர்களின் பள்ளி ஆண்டு இறுதித் தேர்வு மதிப்பெண்களையும் மிக முக்கியமாக ஆய்வு செய்ய வேண்டும்.

ஆறாம் வகுப்பில் பயிலும் மாணவர்கள் முழுமையாக நன்கு பயின்று 7ம் வகுப்பிற்கு சென்றால்தான் தெடர்ந்து நன்றாகக் கற்க முடியும். எனவே, அனைத்துத் தேர்வு முடிவுகளையும் ஆய்வு செய்து கற்றலில் பின் தங்கிய மாணவர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் சார்பில் தனிக் கவனம் செலுத்தி கற்றலை மேம்படுத்த வேண்டும்.

வகுப்பறை, கற்றல் கற்பித்தலுக்கு உகந்த சூழல் உள்ளதாக அமைய வேண்டும். மாணவர்களின் பங்கேற்பு முழுமையாக இருக்க வேண்டும். ஆசிரியர்கள் தேவையான முன் தயாரிப்புடன் வகுப்பறைக்குச் செல்ல வேண்டும். தேர்வு நாட்கள் நீங்கலாக, மீதமுள்ள நாட்களுக்கான கற்றல் கற்பித்தல் நிகழ்வுகள் தயாரித்து பாடத்திட்டத்தை முழுமையாக முடிக்கும் வகையில் ஆண்டுத் தொடக்கத்திலேயே திட்டமிட வேண்டும்.

பள்ளியில் உள்ள அறிவியல் உபகரணங்கள், உலகப் படங்கள், கணித உபகரணப் பெட்டி, நூலகப் புத்தகங்கள், உள்ளூரில் கிடைக்கும் மாதிரிகள் போன்ற வளங்களை வகுப்பறையில் ஆசிரியர்கள் நன்முறையில் பயன்படுத்தச் செய்ய வேண்டும்.

மொழிப்பாடங்களைப் பொறுத்தவரையில், மொழித்திறன் வளர்ப்பதில் கவனம் செலுத்துவதுடன் மாணவர்களின் கையெழுத்து அழகாகவும், தெளிவாகவும் இருக்கும்படி செய்ய வேண்டும்; கட்டுரைப் பயிற்சி ஏடுகள் முறைப்படி ஆசிரியரால் உடனடியாகத் திருத்தம் செய்து அளிக்கப்பட வேண்டும். பிழைகளை மாணவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து மொழியைப் பிழையின்றிச் செம்மையாக எழுதிட உரிய பயிற்சியினை அளிக்க வேண்டும். முறையாக ஒலிக்கவும், பிழையின்றிப் படிக்கவும் தேவையான பயிற்சி அளித்தல் வேண்டும்.

**12. மாணவர்களின் கற்றல் சார்ந்த பதிவேடுகளைப் பார்வையிடுதல்**

மாணாக்கரின் கற்றல் அடைவுகளை மேம்படுத்தும் பொருட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்ற கையெழுத்து ஏடுகள், கட்டுரைச் சுவடிகள், அறிவியல்

செய்முறைப் பதிவேடுகள், ஒப்படைப்புகளின் பதிவேடுகள், சமூகவியல் வரைப்படப் பதிவேடுகள், ஓவியப் பயிற்சி ஏடுகள், தேர்ச்சி முன்னேற்ற அறிக்கை அட்டைகள், பாடவாரியான, வகுப்பு வாரியான மதிப்பெண் பட்டியல்கள் முதலானவற்றைத் தலைமையாசிரியர், மாதம் ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும். இந்த ஆய்வுப் பணியில் உதவித் தலைமையாசிரியர்களின் ஒத்துழைப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பணியில் தலைமையாசிரியர்கள் தங்களின் முழு ஆளுமைத் திறனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**13. சிறப்பு வகுப்புகள் நடத்துதல்**

6 முதல் 12ஆம் வகுப்பு வரைத் தனித்தனியாக அனைத்து வகுப்புகளிலும், கல்வியில் பின்தங்கிய மாணாக்கர்களின் பெயர்ப்பட்டியல் தயார் செய்யப்பட்டு, அதற்கான பதிவேடுகளையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அம்மாணாக்கர்களுக்கும், மற்ற மாணாக்கர்களுக்கும் மாலை நேர சிறப்பு வகுப்புகள் நடத்தி, அவர்களுடைய கற்றல் அடைவுகளை கல்வித் தரத்தை மேம்படுத்துதல் வேண்டும்.

சிறப்பு வகுப்புகள் நடத்துவதில் எந்தவிதக் குறைபாட்டிற்கும் இடமளித்துவிடக்கூடாது என்பதில், தலைமையாசிரியர்கள் மிகுந்த விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.

**14. 9, 10ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு அறிவியல் செய்முறைப் பயிற்சிகள்**

2010–11 மற்றும் 2011–12ஆம் கல்வியாண்டு முதல் 9 மற்றும் 10ஆம் வகுப்பிற்கு அறிவியல் பாடத்திற்குச் செய்முறைத் தேர்வு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பாடத்திட்டத்தின்படி, 9ஆம் மற்றும் 10ஆம் வகுப்பு அறிவியல் பாட நூலில் கொடுக்கப்பட்டுள்ள செய்முறைகளை, அம்மாணாக்கர் அனைவரும் கண்டிப்பாக ஆய்வகம் சென்று செய்முறைகள் செய்யும் வகையில் கால அட்டவணை தயாரித்து ஆசிரியர்கள் பின்பற்றச் செய்ய வேண்டும். இதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, தேவையான வசதிகள் அனைத்தையும் தலைமையாசிரியர்கள் செய்து தர வேண்டும்.

**15. உடற்கல்வி மற்றும் யோகா**

வாரத்தின் இரண்டு பாடவேளைகள் நடைபெறும் உடற்கல்விப் பாடவேளைகள் எவ்விதக் குறைபாடுமின்றி நடைபெற வேண்டும். ஒவ்வொரு உடற்க் கல்வி ஆசிரியரும் குறைந்தபட்சம், ஒருவிளையாட்டில், ஜுனியர், சீனியர், சூப்பர் சீனியர் பிரிவுகளில் இரண்டிரண்டு குழுக்களைத் தேர்வு செய்து, எவையேனும் இரு குழு விளையாட்டில் சிறப்புப் பயிற்சி கொடுத்தல் வேண்டும். இவை குறித்த விவரங்களைத் தனியாக ஒரு பதிவேட்டில் பதிவு செய்து பராமரிக்க வேண்டும்.

ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும், பள்ளி நேரத்திற்குப் பிறகு அனைத்து மாணாக்கருக்கும் கூட்டு உடற்பயிற்சி நடத்தப்பட வேண்டும். மாணாக்கர் எண்ணிக்கை

மிகுதியாக இருக்கும் பள்ளியில், வாரம் இரு நாட்களிலுமாவது கூட்டு உடற்பயிற்சியை அவசியம் மேற்கொள்ளச் செய்தல் வேண்டும்.

பாரதியம், ஆசனங்கள், யோகா, லெசிம், டம்பிள்ஸ் போன்றவற்றில் ஆர்வமுள்ள மாணாக்கர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல் வேண்டும். தடகள விளையாட்டில் ஆர்வமுள்ள மாணாக்கர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்க வேண்டும். கல்வியாண்டின் இறுதியில் கட்டாயம் விளையாட்டுப் போட்டிகள் நடத்திப் பரிசளிக்க வேண்டும். இடையில், வட்டார அளவிலும், கல்வி மாவட்ட அளவிலும் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளிலும், பிற அமைப்புகள் நடத்தும் போட்டிகளிலும் மாணாக்கரை ஆர்வத்துடன் ஈடுபடச் செய்ய வேண்டும். இவ்வகையில், உடற்பயிற்சியாசிரியர்களுக்கு அவ்வப்போது தேவையான ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் தலைமையாசிரியர்கள் வழங்குதல் வேண்டும்.

## 16. தனித் திறன் வளர்த்தல்

தலைமையாசிரியர்களும், பிற ஆசிரியர்களும் தனித்திறன் மிக்க மாணாக்கர்களை இனங்கண்டு, அவர்களின் திறமையை வெளிப்படுத்தவும், மேலும் வளர்த்துக் கொள்வதற்குத் தேவையான வாய்ப்பு வசதிகளை உருவாக்கித் தர வேண்டும். அனைத்துப் பள்ளிகளிலும் வழக்கம்போல் நடைபெற வேண்டிய இலக்கிய மன்றங்கள், கணித, அறிவியல் கழகங்கள், நுண்கலை மன்றங்கள் ஆகியவற்றிலும், ஓவியம், நாட்டியம், நாடகம், கிராமியக் கலைகளில் ஈடுபாடு, இசைக் கருவிகளைக் கையாளுதல் முதலான துறைகளில் ஆர்வமும் திறனும் உடைய மாணாக்கரைக் கண்டறிந்து, பள்ளி நேரத்திற்குப்பின் அவர்களுக்கு அத்துறை வளர்ச்சிக்கான பயிற்சிகள் வழங்க வேண்டும். இதற்கு அத்துறை சார்ந்த வல்லுநர்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் உரிய நடவடிக்கைகளைத் தலைமையாசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

## 17. ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல்

சமச்சீர் கல்வித் திட்டத்தின்கீழ் 2010–11 ஆம் கல்வியாண்டிற்கான 6 ஆம் வகுப்புக்கான அனைத்துப் பாடநூல்கள் வெளியிடப்பட்டு தற்சமயம் நடைமுறையில் உள்ளன. அப்பாடநூல்களைக் கற்பிப்பதற்கான புத்துணர்வுப் பயிற்சிகள் மொழியாசிரியர்களுக்கும், பிற பாட ஆசிரியர்களுக்கும் தக்க வல்லுநர்களைக் கொண்டு நிகழ்த்தப்படவுள்ளது. மாநில அளவிலான முதன்மைக் கருத்தாளர்களுக்குரிய பயிற்சி முகாம்களுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் நேரில் சென்று பார்வையிட்டும், கருத்துரைகள் வழங்கவும் உள்ளார். ஆசிரியர்கள் பெற்ற பயிற்சியின் அடிப்படையில் கற்பித்தலை மேற்கொண்டுள்ளனரா என்பதையும் தம் மேற்பார்வையில் தலைமையாசிரியர்கள் கண்காணிக்க வேண்டும்.

**18. பள்ளி வளர்ச்சியில் மாணவர் அமைப்புகள்**

அனைத்துப் பள்ளிகளிலும் சாரண, சாரணியர் இயக்கம் அவசியம் செயல்பட வேண்டும். நாட்டு நலப் பணித் திட்டம் செயல்படும் பள்ளிகளில் இத்திட்டத்தின் அனைத்துக் குறிக்கோள்களும் செம்மையாக நிறைவேற்றப்பட்டு வருகிறதா என்பதைத் தலைமையாசிரியர்கள் கண்காணிக்க வேண்டும். இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம், தேசிய மாணவர் படை, தேசிய பசுமைப் படை, சாலைப் பாதுகாப்பு அமைப்பு, சுற்றுப்புறச் சூழல் கழகம், நுகர்வோர் பாதுகாப்பு மன்றம் போன்ற அமைப்புகளை அனைத்துப் பள்ளிகளிலும் அமைத்துச் செயல்படுத்த வேண்டும். ஒவ்வொரு அமைப்புக்கும் ஓர் ஆசிரியரைப் பொறுப்பாசிரியராக நியமித்து, இவ்வமைப்புகளைக் கொண்டு பள்ளியின் சுற்றுச்சூழல் தூய்மையாக இருப்பதற்குத் தலைமையாசிரியர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பள்ளி வளாகத்தில் நிழல் மற்றும் பயன்தரும் மரங்களை வளர்ப்பதற்கு மாணாக்கரை ஊக்கப்படுத்த வேண்டும். மேலும், தமிழகத்தின் வரலாறு கலை, பண்பாடு, தொல்லியல் போன்றவற்றை மாணவர் தெரிந்துகொள்ள ஏதுவாகவும் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையிலும் அனைத்துப் பள்ளிகளிலும் தொன்மைப் பாதுகாப்பு மன்றம் (Heritage Club) துவங்கப்பட வேண்டும்.

**19. தேசிய விழாக்களைக் கொண்டாடுதல்**

பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவர்களும் நமது நாட்டின் கலாச்சாரம், பண்பாடு, நாகரிகம், நாட்டுப்பற்று, விடுதலை வரலாறு, தேசிய ஒருமைப்பாடு, நாட்டின் குடியாட்சி போன்ற உயர்ந்த நெறிகளைத் தெரிந்து கொண்டு, மனதாரப் பின்பற்றக்கூடிய வகையில் பள்ளியில் போதுமான வாய்ப்புகளையும், அனுபவங்களையும் பள்ளி மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எனவே, மாநிலத்திலுள்ள அனைத்து மேல்நிலை / உயர்நிலை பள்ளிகளிலும் தேசிய விழாக்களான சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி ஜெயந்தி, குழந்தைகள் தினம், ஆசிரியர் தினம் போன்ற விழாக்களைத் தவறாமல் கொண்டாட வேண்டும்.

ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள அனைத்து மன்றங்களின் ஆண்டு விழாக்கள், பள்ளி ஆண்டு விழா, விளையாட்டு விழா, அறிவியல் தினம் போன்ற நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்த வேண்டும். மாணவர்களிடம் இருக்கக்கூடிய தனித்திறமையை வளர்க்கும்படியான பல்வேறு வகையான போட்டிகள் நடத்தி இவ்விழாக்களில் பரிசுகள் வழங்கி, மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஒவ்வொரு துறைக்கும் ஓர் ஆசிரியர் பொறுப்பேற்றுச் செவ்வனே செய்து முடிக்கத் தலைமையாசிரியர்கள் ஏற்பாடு செய்தல் வேண்டும். இதுசார்ந்த பதிவேடுகளைப் பராமரிக்க வேண்டும்.

**20. நூறு விழுக்காடு தேர்ச்சி விழுக்காடு பெறச் செய்தல்**

“கல்வியின் ஊங்கில்லை சிற்றுயிர்க்கு உற்றதுணை” என்னும் கருத்தினை ஏற்று, பள்ளியில் பயிலும் 6 முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் அனைவரையும் தேர்ச்சி பெறச் செய்வது நம்முடைய தலையாய பணியாகும். இதற்கு ஏற்றவரையில் கற்றல் கற்பித்தலை கையாண்டு நூறு விழுக்காடு தேர்ச்சி என்பதை மனதில் கொண்டு பணியாற்றும் பொழுது கல்லாமை என்பதை இல்லாமையாக்கச் செய்ய முடியும்.

**21. பெற்றோர் ஆசிரியர் கழகமும் புரவலர் திட்டமும்**

ஒவ்வொரு பள்ளியிலும் பெற்றோர் ஆசிரியர் கழகம் அதற்குரிய செயல்திட்டங்களை ஏற்று, நன்கு செயல்படச் செய்யும் வகையில் தலைமையாசிரியர்கள் சிறப்பாகச் செயலாற்றிட வேண்டும். புரவலர் திட்டத்தை தலைமையாசிரியர்கள் மேலும் சிறப்புடன் செயல்படுத்தி பல புரவலர்களை பள்ளியில் தொடர்ந்து சேர்த்திட வேண்டும்.

**22. மரம் வளர்த்தல்**

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கத்துடன் பள்ளியைச் சுற்றிலும், பள்ளி வளாகத்திலும் மரம் வளர்த்தலை ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு மாணாக்கரும் ஒரு மரம் வளர்க்க வேண்டும் என்ற கருத்தை மாணாக்கர்கள் மனதில் தலைமையாசிரியர்கள் வலியுறுத்த வேண்டும்.

**23. நூலகத்தைப் பயன்படுத்துதல்**

மாணாக்கர்கள் பொது அறிவை வளர்ப்பதற்கும் கற்றல் திறனை மேம்படுத்திக் கொள்ளவும், படிக்கும் பழக்கத்தினை மேம்படுத்திக் கொள்ளவும் நூல்களைப் படித்தல் அவசியமாகும். எனவே, மாணாக்கர்கள் பள்ளியில் இருக்கும் நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள அறிவுரை வழங்க வேண்டும். மேலும், வகுப்பறை நூலகங்களை புத்தகப்பூங்கொத்துக்கள் மூலம் பயன்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். நூல்களின் பயன்கள், அவைகள் அளிக்கும் செய்திகள் போன்றவற்றை எடுத்துக்கூறி, பள்ளி நூலகத்தை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள தலைமையாசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**24. அகராதியைப் பயன்படுத்துதல் (Dictionary)**

மாணவர்களின் தமிழ், ஆங்கில மொழிகளில் சொற்களஞ்சியப் பெருக்கத் திறனை மேம்படுத்தவும், சொற்களின் பொருளைத் தெளிவாக அறிந்து கொள்ள ஆங்கில – தமிழ் அகராதியைப் பயன்படுத்தவும் ஏற்ற வழிமுறைகளை ஆசிரியர்கள் உணர்த்துமாறு தலைமையாசிரியர் அறிவுறுத்த வேண்டும்.

**25. சதுரங்க விளையாட்டு (Chess Club)**

2012–13ஆம் கல்வியாண்டின் அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சதுரங்க விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட உள்ளது. அனைத்து பள்ளிகளிலும் (Chess Club) துவங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**26. Public Private Partnership**

பள்ளிக் கல்வித் துறையை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு, அரசுப் பள்ளிகளில் உள்ள அடிப்படை வசதிகளைப் பொது நிறுவனங்கள் மற்றும் புரவலர்கள் பங்களிப்பின் மூலம் மேம்படுத்தி நடத்திட ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டம், பள்ளிகளுக்குத் தேவைப்படும், குறிப்பிட்ட தேவைகளைத் தாங்களே வழங்கிடவோ நன்கொடைகள் மூலமாகவோ 5 முதல் 7 வருடங்களுக்கு செயல்படுத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding) மூலம் நிறைவேற்றப்படுகிறது. இது சார்ந்த நடவடிக்கைகளையும் தலைமையாசிரியர் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள குறைந்தபட்ச குறிக்கோள்களை இக்கல்வியாண்டில் செய்து முடிக்க வேண்டி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் ஆர்வத்துடனும், ஈடுபாட்டுடனும் நிறைவேற்றி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், ஒழுக்க மேம்பாட்டிற்கும் துணைபுரிய வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**நன்றி, வணக்கம்**

**பள்ளிக் கல்வி இயக்குநர்.**